பொன்னேரி ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி A. நந்தினி அருள்

ஊராட்சி ந.க.எண் 1/2024 நாள் : 12.01.2024

பொருள் : திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் பொன்னேரி ஊராட்சி பொன்னேரி கிராம சர்வே எண் 190/1 ல் 3.80 ஏக்கர் அல்லது 1.54.00 புஞ்சை ஏர்ஸ் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவில் 1 முதல் 73 வரையிலான காலி மனைகளுக்கு ஊராட்சி மன்ற அனுமதி அளித்து உத்தரவிடுதல் சார்பு

பார்வை :

1. மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பத்தூர் அவர்கள் கடித எண் : H3AAYGDK/2023/THP Date : 29.12.2023
2. அரசாணை நிலை எண் : 79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 04.06.2017
3. அரசாணை நிலை எண் : 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 23.09.2020
4. அரசாணை நிலை எண் : 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் : 09.12.2020
5. மனுதாரர் திரு N.P. ஜெயகுமார் அவர்களின் ROC No: H3AAYGDK/2023/2024/TCP நாள் : 11.01.2024
6. ஊராட்சி மன்ற தானப்பத்திர ஆவண எண் 117/2024, 118/2024 நாள் : 10.01.2024
7. நன்னிலை வரி செலுத்திய இரசீது எண் : 20240113014109 நாள் : 13.01.2024
8. அங்கீகார கட்டணம் செலுத்திய இரசீது எண் : (UPI transaction ID : 401374798054)
9. கூராய்வு கட்டணம் செலுத்திய இரசீது எண் : (UPI transaction ID : 401374283977)
10. ஊராட்சி மன்ற தீர்மான எண் : 139 நாள் : 12.01.2024

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் வட்டம் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் பொன்னேரி ஊராட்சி பொன்னேரி கிராம சர்வே எண் 190/1 ல் 3.80 ஏக்கர் அல்லது 1.54.00 புஞ்சை ஏர்ஸ் பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவில் 1 முதல் 73 வரையிலான காலி மனைகளுக்கு நன்னிலை வரி, அங்கிகார கட்டணம் மற்றும் கூராய்வு கட்டணம் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு செலுத்தப்பட்டது.

வ.எண்	ஊராட்சி	கட்டணம் மதிப்பீடு	மொத்த ரூபாய்	செலுத்திய தலைப்பு
1	பொன்னேரி	1 ஏக்கர் 724000 வீதம் 3.80 ஏக்கர் 2751200 X 3% = 82536	82600 (ROUND UP)	அரசு தலைப்பு DPC - 021703800AA22709
2	பொன்னேரி	1 மனைக்கு 1000 வீதம் 73 மனைகள் 73 x 1000 = 73000	73000	பொன்னேரி ஊராட்சி கணக்கு
3	பொன்னேரி	அங்கீகார கட்டணம் 1 ஏக்கருக்கு 1000 வீதம் 3.80 x 1000 = 3800	4000 (ROUND UP)	பொன்னேரி ஊராட்சி கணக்கு

மனைப்பிரிவில் அமைந்துள்ள காலி மனைகளின் விவரம்

வ. எண்	பொன்னேரி ஊராட்சி பொன்னேரி கிராம சர்வே எண் 190/1 ல் பரப்பளவில் அமைந்துள்ள காலி மனைகளின் விவரம்		
1	மனைபிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு	15,400 ச.மீ	விவரம்
2	மொத்த மனைகள்	73 காலி மனைகள்	1 முதல் 73 வரை மொத்த மனைகள்
3	பொது உபயோகம் பூங்கா இடம் மற்றும் சாலை	-	ஊராட்சி தானப்பத்திர ஆவண எண் 117/2024
4	தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு	-	ஊராட்சி தானப்பத்திர ஆவண எண் 118/2024

பார்வை (6) ல் காணும் ஆவணத்தின் மூலம், ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு, பூங்கா இடம் மற்றும் சாலை, மின்சார ஒதுக்கீடு இடம் ஆகியவை பொன்னேரி ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை (7) ல் காணும் அரசாணையின்படி அரசு தலைப்புக்கு செலுத்த வேண்டிய நன்னிலை வரி, பார்வை (8) -ல் அங்கிகார கட்டணம், பார்வை (9) ல் கூராய்வு கட்டணம் காணும் விவரம்படி உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை (10) -ல் மேற்படி மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்க பொன்னேரி ஊராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது (தீர்மான எண் : 139 நாள்: 12.01.2024 இதனடிப்படையில் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படின் மனைப்பிரிவற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.
2. மனுதாரர் சமர்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி, நில உரிமம் குறித்து பரிசீலக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்ட முடியாதுயெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மேற்படி வீட்டு மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஊராட்சிமன்றத் தலைவர்
பொன்னேரி ஊராட்சியம்,

தலைவர்,
பொன்னேரி ஊராட்சி,

பெறுநர்

N.P.ஜெயகுமார்,
த/பெ பவுன்ராஜ்,
126 R.C. சாமண்ண கவுண்டர் தெரு,
நாட்றம்பள்ளி,
திருப்பத்தூர் மாவட்டம்.

நகல்

1. சார்பதிவாளர் ஜோலார்பேட்டை.
2. DTCP திருப்பத்தூர்.
3. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருப்பத்தூா